உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியத்திற்கு தமிழக அரசு 50 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கின்றது. அதன்மூலம் உடல் ஊனமுற்றோர் நல கூட்டுறவுச் சங்கம், சென்னை, வேலூர் ரௌன்ட் டேபிள் 23 டிரஸ்ட், மித்ரா, சென்னை பத்திலே இருக்கின்ற பாலவிஹார், தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு அசோசியேஷன் ஆகிய 5 நிறுவனங்களுக்கும் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர 71 உடல் ஊன முற்றோருக்குச் செயற்கை உறுப்புக்களை வாங்கித்தருவதற்கும் இந்த வாரியம் பணஉதவி அளித்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Training to physically handicapped persons.

*Q. No. 734—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state :

(*a*) whether the Government have proposed to provide grants/loans to the private sector industries who impart training to physically handicapped persons; and

(*b*) if so the details of the firms who have availed of the benefits under the scheme?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த உடல் ஊனமுற்றோருக்கான தொழில் பயிற்சி நிலையங்களை நடத்துகின்ற தனியார்களுக்கு மானியங்கள் அளிக்கவில்லை என மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்கின்றார்கள், ஆனால் உடல் ஊனமுற்றவர்களுக்கு மாவட்ட வாரியாக ஊன்றுகோல்களும், 3 சக்கர வண்டிகளும் வழங்கப்படுவது குறைவாக இருக்கின்றதே. இன்னும் பல பேர் அப்படிப்பட்டவர்கள் எழுந்து நடக்க முடியாத நிலையில் இருக்கிறார்களே, அவர்களுக்கெல்லாம் அப்படிப்பட்ட 3 சக்கர வண்டிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவரவர்களே, ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் 3 சக்கர சைக்கிள் வண்டிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் தனிப்பட்ட சேவை நல இல்லங்களைச் சார்ந்தவர்களும் சில இடங்களில் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதற்கு மேல் அரசின் நிதிநிலை இடம் தராது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தமிழ்நாட்டில் உடல் ஊனமுற்றோர் மொத்தம் எத்தனை பேர் என்ற குறிப்பு இருக்கிறதா ? அதிலே ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர்? பெண்களுக்குக் குறிப்பாக தையல் இயந்திரங்களைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவரவர்களே, இது குறித்துத் தனிக் கேள்வ போட வேண்டுகிறேன்.

[முற்பகல் 9.10]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, உடல்ஊனம் உற்றவர்கள் தங்களுடைய பெயரில் வைத்திருக்கிற சொந்தமாக உபயோகப்படுத்தக்கூடிய ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், சிறிய கார்கள் ஆகியவைகளுக்கு மோட்டார் வாகன சட்டத்தில் இருந்து விதி விலக்கு அளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இது குறித்து அரசின் பரிசீலனையில் எந்தக் குறிப்பும் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் கல்யாணம் ஆகாதவர்களாக இருந்தால், குறைந்த படிப்பு படித்தவர்களாக இருந்தால், அவர்களுக்கு தொழிற்சாலைகளில் வேலை கொடுத்தால், அவர்களுக்கு வருமானம் கிடைக்கும். அப்போது பெண்கள் அவர்களைக் கல்யாணம் செய்து கொள்ள முன்வருவார்கள். அப்படி உடல் ஊனமுற்றவர்களுக்கு இந்த அரசு ஏதாவது தொழிற்சாலையை நடத்த உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் உடல் ஊனமுற்றவர்களுக்காக முட்டுக்காட்டில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடிந்தவுடன் அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டு, அப்படி 71 பேர்கள் இருக்கிறார்கள். இது மேலும் இரட்டிப்பாக்கப்பட இருக்கிறது. அது மட்டுமல்ல, இன்னும் 2 மாவட்டங்களில் அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் நிறுவப்பட இருக்கிறது.

திரு. துரை முத்துசாமி : தலைவரவர்களே, இரண்டு மாவட்டங்களில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிப்பீர்களா ?

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி முடிவு செய்யவில்லை.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்காக தனியார் நிறுவனங்களிட மிருந்து நாங்கள் அவர்களுக்கு வேலை அளிக்கிறோம், மான்யம் தாருங்கள் என்று அரசை யாராவது கேட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, தனியார் நிறுவனத்திற்குப் பண உதவி செய்வதில்லை என்று என் பதிலிலே குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு தனியாரும் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று அரசு ஏதாவது அவர்களுக்கு உத்தர விட்டிருக்கிறதா? அப்படிப்பட்ட முயற்சியை அரசு மேற் கொள்ளுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை.

புன்னக்காயல் கடற்கரைப் பகுதியில் தடுப்புச் சுவர்.

வினா எண். 804—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) திருச்செந்தூர் தாலுகா, புன்னக்காயல் கடற்கரைப் பகுதியில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேறும்?

(இ) அதற்காக ஒதுக்கப்பட்டத் தொகை எவ்வளவு?

திரு. மீ. வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) & (இ) ஆதலால் இக்கேள்விகள் எழ இடமில்லை.